**தமிழியல் துறை**

**மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்**

**திருநெல்வேலி**

**செய்திக் குறிப்பு**

**மனோன்மணியம் சுந்தரனார் விருது அறிவிப்பு**

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்தியாவில் புதிதாக உருவாகி வந்த அனைத்து அறிவுத்துறைகளோடும் தொடர்பு கொண்டிருந்தவர் பேரா. சுந்தரனார். தத்துவ அறிஞராகவும், வரலாற்று அறிஞராகவும் பெரிதும் மதிக்கப்படுபவர். தமிழ்த்தாய் வாழ்த்தினை தமிழுலகிற்கு தந்தவர். அவருக்குப் பெருமை சேர்க்கும் வகையில் தமிழக அரசால் நிறுவப்பட்ட மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் ஆண்டுதோறும் ஒரு இலட்சம் (ரூ.1,00,000) மதிப்பில் தமிழறிஞர் ஒருவருக்கு அவர் பெயரால் விருதளித்து சிறப்பு செய்து வருகின்றது.

2025 - 2026 ஆம் ஆண்டிற்கான சிறந்த நபரை தெரிவு செய்து ஜ{லை மாதத்தில் விருது வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் தகுதியான நபரை மனோன்மணியம் சுந்தரனார் விருதுக்குக் கீழ் குறிப்பிடும் நெறிமுறைகளின் அடிப்படையில் 30.06.2026க்குள் பரிந்துரைத்து அனுப்புமாறு வேண்டுகிறோம்.

1. மனோன்மணியம் சுந்தரனார் விருது எனும் இந்த விருதுக்குரியவர் தமிழக அளவிலோ, தேசிய அளவிலோ, உலக அளவிலோ, மதிக்கப்படும் சிறந்த தமிழறிஞராக , தொல்லியல் அறிஞராகவோ, அறிவியல் தமிழ் அறிஞராகவோ, கணினித் தமிழ் வல்லுநராகவோ இருத்தல் வேண்டும்.

2. யாதாயினும் ஒரு கோட்பாட்டைச் சீர்மைபெற விளக்கும் வகையிலோ, ஒரு கோட்பாட்டைப் பொருத்தத்துடன் பயன்படுத்தி ஆய்வு செய்த வகையிலோ, இன்றைய இலக்கியத் தளங்களில் ஆழங்கால்பட்டுத் தெளிவுடன் ஆராய்ந்த வகையிலோ, பழைய இலக்கியங்களில் புதிய ஒளிகளைப் பாய்ச்சுகிற வகையிலோ, பிற நூல்களில்ஃஆய்வுகளில் மேற்கோள் காட்டப்படுகிற தகுதியுடன் ஒன்றிற்கு மேற்பட்ட நூல்களையும் இலக்கிய இதழ்களில் அல்லது ஆராய்ச்சி இதழ்களில் பெயர் சொல்லத்தக்க கட்டுரைகளையும் வெளியீடுகளையும் செய்திருப்பவர் இப்பரிசுக்குத் தகுதியுடையவர் என்று கருதலாம்.

3. தகுதிக்குரியவரின் தன் விபரக்குறிப்பு, வெளியீடுகளின் பட்டியல் இவ்விருதுக்கானத் தகுதிக்குரிய காரணங்களையும் குறிப்பிட்டுப் பரிந்துரை அமைய வேண்டும். விருதுக்குரியவரின் நூல்கள் , படைப்புகள் தரமிக்கவையாகவும், நன்மதிப்பினை பெற்றவையாகவும் இருத்தல் வேண்டும்.

4. ஒருவர் இருவரைப் பரிந்துரை செய்யலாம். தங்களது பரிந்துரை இரகசியமாக இருப்பது வரவேற்கத்தக்கது.

5. பரிந்துரைக்கப்படுபவர்களின் பட்டியல் தேர்வுக்குழுவுக்கு அனுப்பப்பட்டு ஒருவர் தெரிவு செய்யப்படுவார். தேர்வுக் குழுவின் முடிவே இறுதியானது.

6. பரிந்துரைக்கப்படுபவரின் பெயர், முகவரி, விருதுக்குத் தகுதியாகக் கருதப்படும் பங்களிப்பு, பரிந்துரைப்புக்கான காரணங்கள், வெளியீடுகளின் பட்டியல் பரிந்துரைப்பவரின் பெயர், முகவரி ஆகிய தகவல்களுடன் பரிந்துரை அமைய வேண்டும்.

7. தகுதியானவர்களின் பரிந்துரையை 30.06.2026 க்;குள் தமிழியல் துறைத்தலைவர், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி – 12. என்ற முகவரிக்கு அனுப்பப்பெற வேண்டும்.

இதனைப் பல்கலைக்கழகப் பதிவாளர் தனது செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.